# FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8033639

1. District மாவட்டம் : சிவகங்கை    PS காவல்நிலையம்: வை.த.க. பிரிவு    Year ஆண்டு: 2018    FIR No. மு.த.அ. எண்: 1    Date நாள்: 03.02.18

2. (i) Act சட்டம்: இ.பி.த.ச    Sections பிரிவுகள்: 102.
   (ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988.    Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(d)
   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from நாள் முதல் : 02.02.18    Date to நாள் வரை : -
   Time Period நேர அளவு :    Time from நேரம் முதல் : 18.30 hrs    Time to நேரம் வரை : 23.30 hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.02.18    Time நேரம் : 10.30 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    Time நேரம் : 11.30 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    எழுத்து மூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்    சுமார் 1 km தெற்கு.
   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி    உ.நி. இணை சார்பதிவாளர் அலுவலகம், சிவகங்கை
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் —    District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ர.செந்தில் வேலு    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கணேசன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 02.04.1966    (d) Nationality : நாட்டினம் இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் தனி வட்டாட்சியர்    (g) Address : முகவரி நகர நிலவரித்திட்டம் அலுவலகம், சிவகங்கை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) மு. கோகில முருக பூபதி, 49/18, த/பெ. முத்திரான், உ.நி. இணை சார்பதிவாளர், சிவகங்கை
   2) கி. செண்பக மூர்த்தி, 40/18, த/பெ. இருளாயி. அலுவலக உதவியாளர், உ.நி. இணை சார்பதிவாளர் அலுவலகம், சிவகங்கை.
   3) M. பாண்டியன், 49/18, த/பெ. மலைச்சாமி, உதவியாளர், உ.நி. இணை சார்பதிவாளர் அலுவலகம், சிவகங்கை
   4) பெ. ராஜா 25/18 த/பெ. பெருமாள், Data Entry Operator, - do -
   5) அமீர் அம்சா [illegible] 51/18 த/பெ. [illegible] 7, ஆசாத் தெரு, சிவகங்கை.

8. Reasons for delay in reporting by the complainant / informant
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

சிவகங்கை சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு சட்டம் 1988) நீதிமன்றம் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 03.02.2018ம் தேதி 10.30 மணிக்கு நான் அலுவலகத்தில் இருந்தபோது வாதியான துணை ஆய்வுக்குழு அலுவலரான சிவகங்கை நகர நிலவரித்திட்டம் அலுவலக தனிவட்டாட்சியர் திரு.G.செந்தில்வேலு அலுவலகத்தில் ஆஜராகி 02.02.2018ம் தேதி சிவகங்கை மாவட்டம், சிவகங்கை 2 நிர் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் நடத்திய திடீர் சோதனை சம்மந்தமாக செயல்முறை நடவடிக்கைகள், 02.02.2018ம் தேதி பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ21,650/– மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்களுடன் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப்பெற்று சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/2018, பிரிவு 102 கு.வி.மு.ச மற்றும் 13(2) உ/இ 13(1)(d) ஊழல் தடுப்பு சட்டம் 1988–ன்படி பதிவு செய்தேன். வாதி புகார் பின்வருமாறு. அனுப்புநர் : திரு.G.செந்தில்வேலு, தனிவட்டாட்சியர், துணை ஆய்வுக்குழு அலுவலர், தனி வட்டாட்சியர், நகர நிலவரித்திட்டம் அலுவலகம், சிவகங்கை, பெறுநர்: காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை, ந.க.எண்.2/2018, நாள். 03.02.2018, அய்யா, பொருள் : திடீர் சோதனை – சிவகங்கை மாவட்டம் – சிவகங்கை, 2 நிர் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் 02.02.2018 அன்று திடீர் சோதனை மேற்கொண்டது – துணை ஆய்வுக்குழு அலுவலரது செயல்முறை நடவடிக்கைகளின்படி – மேல்நடவடிக்கை கோருவது தொடர்பாக.

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு 03/02/2018

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
03.02..18

Name: பெயர் ........................
Rank: நிலை காவல் துணை கண்காணிப்பாளர்
ஊ.த.க.பிரிவு, சிவகங்கை.

* GCP-240-34(Type 2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

சிவகங்கை ஊ.த.க. பிரிவு கு.எண்.1/2018ன் முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி.......

பார்வை : சிவகங்கை துணை ஆய்வுக்குழு அலுவலர் செயல்முறை நடவடிக்கைகள் நாள்.02.02.2018. சிவகங்கை மாவட்டம், சிவகங்கை 2 நிர் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு, வில்லங்க சான்று, திருமண பதிவு மற்றும் இதர சான்றுகள் வழங்குவதற்காக லஞ்சம் கேட்டு வாங்குவதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் 02.02.2018 அன்று 18.30 மணி முதல் 23.30 மணி வரை மேற்படி அலுவலகத்தில் துணை ஆய்வுக்குழு மற்றும் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினர் சேர்ந்து திடீர் சோதனை நடத்தப்பட்டது. மேற்படி சோதனையின்போது சிவகங்கை குடிமைப்பொருள் வழங்கல் பிரிவு தனி வட்டாட்சியர் திரு.இரா.கண்ணன் மற்றும் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.ரா.ரகுபதி ஆகியோர் இருந்தனர். மேற்படி அலுவலகத்தை சோதனையிட்ட போது சிவகங்கை 2 நிர் இணை சார்பதிவாளர் திரு.மு.கோகுல முருக பூபதி 48/18, த/பெ.முத்திருளன் அவரது இருக்கையில் இருந்தார். அவரைச் சோதனை செய்ய அவரது மணி பர்சில் ரூ.796/–, அவரது மேஜை மீதிருந்த அவரது 2018 டைரியில் ரூ.2500/–, அவரது இருக்கைக்கு வலதுபுறமாக உள்ள கம்பியிட்ட ஜன்னலுக்கு வெளியே ஆவண வைப்பறையின் பக்கமாக மேற்படி ஜன்னலில் ரப்பர் பாண்ட் போட்டு சுருட்டி கட்டிய நிலையில் இருந்த ரூ.2600/– ஆக மொத்தம் ரூ.5896/– இருந்தது. அலுவலக பணியாளர் பணம் கையிருப்பு பதிவேட்டை சரிபார்த்ததில் அவரது பணம் ரூ.1,500/– என குறிப்பிடப்பட்டிருந்தது. இதுகுறித்த அவரிடம் விளக்கம் கேட்டபோது நான் எப்பொழுதும் மணி பர்சில் ரூ.1500/–க்கு குறையாமல் வைத்திருப்பேன். அந்த ஞாபகத்தில் ரூ.1500/– என பணம் கையிருப்பு பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளேன் என்றும் மீதப்பணத்தை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் கூறினார். அவரது விளக்கத்தை கேட்ட பின்னர் அவரது மணி பர்சில் இருந்து கைப்பற்றப்பட்ட ரூ.796/– மட்டும் திருப்பி கொடுக்கப்பட்டது. மீதப்பணம் ரூ.5100/–கைப்பற்றப்பட்டது. விசாரணையின்போது அவரிடமிருந்து வருகைப்பதிவேடு, தனிநபர் பண கையிருப்பு பதிவேடு, விடுப்பு பதிவேடு ஆகியவை கைப்பற்றப்பட்டது. அலுவலக உதவியாளர் திரு.கு.செண்பகமூர்த்தி, 40/18, த/பெ.குருசாமி என்பவர் பதிவறையின் நுழைவு வாயிலில் நின்றுகொண்டு இருந்தார். மேற்படி அலுவலகத்தில் துணை ஆய்வுக்குழுவினர் உள்ளே நுழைந்ததை பார்த்தவுடன் கையில் வைத்திருந்த பணத்தை கீழே போட்டார். அதை மேற்படி குழுவினர் கைப்பற்றி எண்ணிப்பார்த்தபோது ரூ.2500/– இருந்தது. இதுபற்றி அவரிடம் கேட்டபோது பத்திர எழுத்தர் அமாலுல்லாவிடம் வேலை செய்யும் திரு.செந்தில் என்பவர் தன்னிடம் ரூ.2500/–ஐ அப்போதுதான் கொடுத்துச்சென்றதாகவும் துணை ஆய்வுக்குழுவினர் உள்ளே நுழைந்ததை பார்த்ததும் கீழே போட்டதாகவும் தெரிவித்தார். செந்தில் எதற்காக பணம் கொடுத்தார் என கேட்டதற்கு தெரியவில்லை என்றும் தான் செந்திலிடம் கேள்வி கேட்பதற்குள் செந்தில் சென்றுவிட்டதாகவும் தெரிவித்தார். மேலும் அவரிடம் இதுதவிர வேறு பணம் வைத்திருக்கிறீர்களா என கேட்டபோது அவரது பர்சில் இருந்து ரூ.790/–ஐ எடுத்து ஆஜர்படுத்தினார். ஆக மொத்தம் ரூ.3290/– அலுவலக உதவியாளர் திரு.கு.செண்பகமூர்த்தியிடம் இருந்து கைப்பற்றப்பட்டது. அலுவலக பணியாளர் பணம்

கையிருப்பு பதிவேட்டை பார்வையிட்டதில் அவரது கையிருப்பு பணம் ரூ.600/– என குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே, மேற்படி தொகையில் ரூ.600/– அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. மீதத்தொகை ரூ.2690/– கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு.M.பாண்டியன், 29/18, த/பெ.மலைச்சாமி அவர்களை சோதனை செய்ய அவரிடம் ரூ.1370/– இருந்தது. மேலும் அவர் பயன்படுத்தும் மரத்திலான மேஜையை சோதனையிட்டபோது இடது பக்க ட்ராயரில் ரூ.850/– இருந்தது. இது பற்றி கேட்டபோது எப்படி பணம் வந்தது என்று தனக்கு தெரியாது என்று கூறினார். அதன்பிறகு அவரிடம் இருந்து மொத்தம் ரூ.2220/– கைப்பற்றப்பட்டது. தனி நபர் பண கையிருப்பு பதிவேட்டை பார்வையிட்டதில் அவரது கையிருப்பு பணம் ரூ.500/– என குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி ரூ.500/– அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. அவர் முகாந்திரம் கூறாத பணம் ரூ.1720/– கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டராக DCS நிறுவனம் மூலம் பணிபுரியும் திரு.பெ.ராஜீ, 25/18, த/பெ.பெருமாள் என்பவரை விசாரிக்க அவர் தன்னிடம் இருந்த ரூ.1730/–ஐ ஆஜர்படுத்தினார். மேற்படி பணம் குறித்து கேட்டபோது சரியான முகாந்திரம் கூறாததால் அவரிடம் இருந்த பணம் ரூ.1730/– கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது அலுவலகத்தினுள் இருந்த தனியர் திரு.அமீர் அம்ஷா 54/18, த/பெ.அப்துல் ரஹீம், 7, ஆஷா தெரு, சிவகங்கை என்பவரை விசாரித்தபோது தன்னிடம் இருந்த ரூ.5910/– ஆஜர்படுத்தினார். பின்னர் தான் பத்திர எழுத்தரான தனது சித்தப்பா சகாபுதீன் என்பவரிடம் வேலை செய்து வருவதாகவும், பத்திரப்பதிவு சம்மந்தமாக அடிக்கடி பத்திர அலுவலகத்திற்கு வருவதாகவும், அதேபோல் இன்றும் வந்ததாகவும், அப்போது ஆய்வுக்குழுவினர் வந்ததால் தான் அங்கேயே இருந்ததகாவும் கூறினார். அவரிடம் இருந்த பணம் பற்றி சரியான முகாந்திரம் கூறாததால் அவரிடம் இருந்து ரூ.5910/– கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது அலுவலகத்தினுள் இருந்த தனியர் கணிணி பொறியாளர் திரு.ரா.மதிவாணன் 38/18, த/பெ.ராசு, 1/64, வடக்குத்தெரு, கட்சிராயன்பட்டி, மேலூர், மதுரை என்பவரை விசாரித்தபோது தன்னிடம் இருந்த ரூ.1010/– ஆஜர்படுத்தினார். தான் தினமும் நயினார்கோயில் வரை செல்வதால் சாப்பாட்டு செலவு மற்றும் இதர செலவுகளுக்காக வைத்திருந்த பணம் என தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கப்பட்டு ரூ.1010/– அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது நடைபெற்ற நிகழ்வுகள் அனைத்தையும் அவர் பார்த்துக்கொண்டிருந்தார். திரு.முத்துக்குமாரபாண்டியன் 28/18, த/பெ.நீதிராஜன், கதவு எண்.7, சி.பி காலனி, 5வது தெரு, திருப்பத்தூர் ரோடு, சிவகங்கை என்பவரை விசாரித்தபோது தான் கேமரா ஆப்ரேட்டராக வேலை பார்த்ததாகவும், கடந்த 1 மாதத்திற்கு முன்பு டென்டர் முடிந்துவிட்டது, இருப்பினும் நீங்கள் தொடர்ந்து வேலை பாருங்கள் என அவரை இங்கு வேலைக்கு அனுப்பிய நிறுவனமான கோயம்பத்தூர் கே.சி.பி. நிறுவனத்தில் இருந்து தெரிவித்தாகவும், இருப்பினும் தான் 1 மாதமாக விடுப்பில் இருந்து வருவதாகவும், இன்று வேலை இருக்கிறது வந்து முடித்துக் கொடுங்கள் என சார்பதிவாளர் கேட்டுக்கொண்டதால் தான் வந்து வேலை செய்து கொண்டு இருந்ததாகவும், அந்த நேரத்தில் துணை ஆய்வுக்குழுவினர் வந்து ஆய்வு செய்ததாகவும், தன்னிடம் இருந்த ரூ.20/–ஐ எடுத்து

ஆஜர்படுத்தினார். மேற்படி பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது, மேற்படி அலுவலகத்தின் ஆவண வைப்பறையில் கிழக்கு சுவரின் தென்புற மூலையில் இருந்த இரும்பு பீரோவிற்கு வடபுறம் இருந்த ஆவணங்களுக்கு இடையில் இருந்த ரூ.1200/– கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி இரும்பு பீரோவிற்கு தென்புறமாக இருந்த பணப்பெட்டகத்தின் மேல் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்களுக்கு கீழ் இருந்த ரூ.1300/– கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் சார்பதிவாளருக்கு நேர் எதிரே உள்ள கணிணி அறையில் வைக்கப்பட்டிருந்த 4 கணிணிகளில் முதல் கணிணி வைக்கப்பட்டிருந்த மேஜையில் இருந்த ரபீக் முகமது பெயரிட்ட ஆவண எண்.281/2018, நாள்.30.01.2018 என்ற ஆவணத்திற்குள் இருந்து ரூ.2000/– கைப்பற்றப்பட்டது. மேற்படி அனாமத்தாக இருந்த ரூ.1200/–, ரூ.1300/– மற்றும் ரூ.2000/– ஆகியவை சம்மந்தமாக 2 நிர் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் இணை சார்பதிவாளர் திரு.மு.கோகுல முருக பூபதி, உதவியாளர் திரு.எம்.பாண்டியன், அலுவலக உதவியாளர் திரு.செண்பகமூர்த்தி மற்றும் டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர் திரு.இராஜீ ஆகியோரிடம் கேட்டபோது மேற்படி பணம் எப்படி வந்தது என எங்களுக்கு தெரியாது. நாங்கள் மேற்கண்ட பணத்தை வாங்கவும் இல்லை, சம்பந்தப்பட்ட இடங்களில் வைக்கவும் இல்லை எனவும் கூறினார்கள். அலுவலக உதவியாளர் மேஜையில் இருந்த எவர்சில்வர் தற்காலிக பணப்பெட்டியில் ரூ.1,09,542/–க்கான இ சலான், ரூ.1,59,710/–க்கான வங்கி வரைவோலை மற்றும் ரொக்கம் ரூ.12,505/– ஆகியவை கைப்பற்றி ஆவணங்களை சரிபார்த்து பின் இணை சார்பதிவாளர் திரு.மு.கோகுல முருக பூபதியிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது தனி நபர்கள் திரு.மதிவாணன், திரு.மனோகரன் மற்றும் திரு.அழகுராஜீ ஆகியோரை சிவகங்கை, நகர நிலவரித்திட்ட அலுவலக தனி வட்டாட்சியர் திரு.G.செந்தில்வேலு விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். தனி நபர்கள் திரு.அண்ணாத்துரை, திரு.தீனதயாளன் மற்றும் முத்துக்குமார பாண்டியன் ஆகியோரை சிவகங்கை குடிமைப்பொருள் வழங்கல் பிரிவு தனி வட்டாட்சியர் திரு.இரா.கண்ணன் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். இத்துடன் மேற்படி கூட்டு ஆய்வின் செயல்முறை அசல் மற்றும் திரு.மதிவாணன், திரு.மனோகரன், திரு.அழகுராஜீ, திரு.அண்ணாத்துரை, திரு.தீனதயாளன் மற்றும் முத்துக்குமார பாண்டியன் ஆகியோரின் வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்கள், மேற்படி சோதனையின் போது கைப்பற்றப்பட்ட பணம் மொத்தம் ரூ.21,650/– ஆகியவற்றை உரிய நடவடிக்கைக்காக தங்களிடம் ஒப்படைக்கிறேன். இப்படிக்கு (Sd) G.செந்தில்வேலு; 03/02/2018. Submitted, to the Hon'ble Special Judge, Special Court for trial cases of the Prevention of Corruption Act-1988, Sivagangai. Received this report along with enclosures and registered a case in Sivagangai V&AC Cr.No.1/2018 u/s 102 Cr.P.C and 13(2) r/w 13(1)(d) of Prevention of Corruption Act 1988 and other FIR copies sent to the concerned officers.

02.02.18
DSP/VACB/SGI.